# தலைவன் பொருள் தேடிச்செல்லும் மொழிபெயர் தேயம் பண்டைத் தமிழர் வரலாற்றின் மறுபக்கமா?: அகநானூற்றுப் பாடல்களை முன்வைத்து ஒரு பார்வை

**முனைவர் ஆ. சந்திரன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், வேலூர்

**மலர்:** 3

**இதழ்:** 4

**மாதம்:** ஏப்ரல்

**வருடம்:** 2019

ISSN: 2454-3993

பண்டைத் தமிழரின் வரலாற்றை இதுவரை பலர் பல கோணங்களில் ஆராய்ந்துள்ளனர். இலக்கியச் சான்றுகளுடன் கல்வெட்டு, தொல்லியல் முதலான சான்றுகளின் பின்புலத்தில் பொதுவாக வரலாற்று ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. வரலாற்றை எழுத இலக்கியங்கள் தரும் ஆதாரங்களைவிட கல்வெட்டுக்கள் தரும் ஆதாரங்கள்தான் நம்பகத்தன்மை வாய்ந்தவை என்பது வரலாற்று அறிஞர்களால் முன்வைக்கப்படும் வாதமாக உள்ளது. “கல்வெட்டில் எழுதியதைத் திருத்த முடியாது” என்பதைத்தவிர வேறு எந்தக் காரணத்தையாவது அதன் நம்பகத்தன்மைக்கு ஆதாரமாகக் காட்டிவிட முடியுமா? என்பதும் சந்தேகமே. அத்துடன், கல்வெட்டில் எழுதியவர்கள் உண்மைகளைத்தான் எழுதினார்கள் என்பதற்கு என்ன சான்றினை நம்மால் காட்டிவிடமுடியும்? என்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்கிறது. இப்படி ஒரு கேள்வியை எழுப்ப, சுந்தர பாண்டியன் காலத்தில் எழுதப்பட்ட திருவெள்ளறைக் கல்வெட்டுத் தரும் செய்தி முக்கியமான காரணமாக அமைகிறது.

> **“வெறியார் தளவத் தொடைச் செயமாறன் வெகுண்டது ஒன்றும்**
> **அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்து**
> **பரியாத தூண் இல்லை கண்ணன் செய்பட்டினப்பாலைக்கு அன்று**
> **நெறியல் விடும் தூண் பதினாறுமே அங்கு நின்றனவே”**

என்ற இக்கல்வெட்டுச் செய்தி இரு உண்மைகளைப் புலப்படுத்துகின்றது.

1. மன்னர்கள் தங்களுக்குள் பகைத்துக்கொண்டாலும் புலவர்களை மிகவும் மதித்து வந்துள்ளனர்.
2. போரில் தோற்கடிக்கப்பட்ட பகைவர் நாட்டின் வரலாற்றுச் சான்றுகள் முற்றிலும் (புலவர்கள் உடைமைகள் தவிர்த்து) அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன்,

1. பரம்பரை, பண்புகள் வெற்றிகள் முதலியனவற்றை மிகைப்படுத்திக் கூறுதல் (சோழப் பெருவேந்தர் காலம்: ப.4)
2. ஓர் அரசனுடைய முன்னோர்களின் பெருமைகளை அவ்வரசன் மீதே ஏற்றிக் கூறுதல் (சோழப் பெருவேந்தர் காலம்: ப.5).
3. ஒரே போர்க்களத்தில் பாண்டியரும், சோழரும், சாளுக்கியரும் போரிட்டனர், ஆனால் இதில் தோல்வியுற்றவர் யாரென்று கூறாமல் அவரவர் வெற்றிபெற்றதாகக் கல்வெட்டு கூறுவது (சோழப் பெருவேந்தர் காலம்: ப.8) முதலான குறைகள் இருப்பதைச் சுட்டிக் காட்டும் வரலாற்று ஆய்வாளர்கள் “ஒரு கல்வெட்டில் கூறப்பெற்ற விவரங்களைப் பிற கல்வெட்டுகளோடு ஒப்பிட்டு சீர்தூக்கி ஆராய வேண்டிய நிலை உள்ளது” (சோழப் பெருவேந்தர் காலம்: ப.8) என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

இந்த உண்மைகளுடன் “வெற்றி பெற்ற மன்னர்களால் எழுதப்பட்ட கல்வெட்டுகள், செப்பேடுகளில் உள்ள செய்திகளை நூறு சதம் உண்மையாவை என்று கொள்வதற்கு நம்மிடம் உரிய ஆதாரம் என்று எதுவும் இல்லாத நிலையில் அத்தகைய ஆதாரங்களைக் கொண்டு வரலாற்றை எழுதுவது சரியா? என்ற ஐயம் கொள்வதில் தவறவில்லை. அதே வேளை புலவர்களின் பாடல்களில் மன்னர்களைப் புகழ்ந்து பாடுவதாக வெளிப்படையாக அமையும் இடங்களையும் உதாரணமாக புறநானூற்றுப் பாடல்கள், மதுரைக்காஞ்சி முதலியனவற்றில் இடம்பெறும் மன்னர்கள் பற்றிய குறிப்புகளை அவ்வாறான அளவுகோலிலே ஆராய வேண்டியுள்ளது. அது ஒரு பார்வை.

அது ஒரு புறமிருக்கட்டும். இவற்றிற்கு மாறான நிலையில், புலவர்கள் போகிறபோக்கில் தங்களை அறியாமலோ அல்லது அகப்பாடல்களில் இரகசியமாகவோ (உவமைகள் உள்ளிட்ட) பதிவு செய்துள்ள குறிப்புகளும்தான் அக்கால உண்மையான வரலாறாக அமைகின்றன. அப்படிப்பட்ட குறிப்புகளில் இடம்பெற்றுள்ள செய்திகளைக்கொண்டு பண்டைக்கால மக்களின் வரலாற்றை அறிந்திருப்பினும், இதுவரை அறிந்த வரலாற்றிற்கு மாறான கருத்துக்களை அப்பாடல்களின் பதிவுகளில் இருந்து கண்டறியமுடியும் என்ற புதிய சிந்தனையை சிவத்தம்பி, தமிழவன் போன்றோர் முன்வைக்கின்றனர்.

சான்றாக, “மாவாராதே மாவாராதே” என்ற புறநானூற்றுப் பாடலின் கதையாடலைக் கட்டவிழ்க்கும் அவர் அப்பாடலில் வெளிப்படுவது ஒரு பெண்ணின் ஏக்கக் குரல் என்கிறார். தலைவனின் பிரிவால் வாடும் பெண்ணின் அங்கலாய்ப்பாய் அமையும் அப்பாடல் புறத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். அத்துடன், குறிஞ்சிப்பாட்டின் தோழி வெளிப்படுத்தும் (குறி.பா.26-29) கருத்தை ஐயப்படும் அவர், சங்க அகமரபைப் போன்று இல்லாமல் பிற்காலக் கோவை இலக்கியங்களில் வரும் தோழி பேசுவதாக அக்கருத்து அமைவதாகக் குற்றம் சாட்டுகிறார்.

மேற்கத்திய இலக்கிய சிந்தனைகள் வழியாக தமிழ் இலக்கியங்களை அணுகும் தமிழவன் “எல்லா இலக்கியப் படைப்புகளும் – எழுத்து ரூபத்தில் இருப்பதால் – அடையாளரீதியாக சிலவற்றைச் சொல்லும்”. இந்த அடையாளங்களில் ஒன்றாக ஒரு குரல் வருவதுண்டு. இந்தக் குரல் ஆசிரியன் குரல் அல்ல. கதைசொல்லியின் குரல்” என்று கதைசொல்லியின் குரல் என்ற ஒரு புதிய சிந்தனை முறையை அறிமுகம் செய்துள்ளார். இந்தச் சிந்தனை வழியாகப் படைப்பில் சாதாரண வாசிப்பில் புலப்படாத நுட்பமான செய்திகளை நம்மால் அப்படைப்புகளில் இருந்து பெறமுடியும் என்று அவர் நம்புகின்றார்.

இவ்விருவரின் ஆய்வுச் சிந்தனைகளில் வழி, சங்க இலக்கியங்களை வாசிக்க முற்படும்போது இதுவரை வாசித்த முறைகளில் இருந்து விலகிய புதிய கருத்துக்களை அவற்றிலிருந்து பெறமுடிகின்றது. அப்படி வாசிக்க முயன்றதன் விளைவாகப் பெற்ற புதிய கருத்துக்களில் ஒன்றாகப் பண்டைக்காலத்தில் சாதாரண மக்களுக்கும் மன்னர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்திருப்பதை அறியமுடிகின்றது.

**"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிரென்று அறிகை**
**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"** **(புறம் :182)**

என்ற புறநானூற்றுப் பாடலின் முன்னிரு அடிகளை மட்டும்கொண்டு அக்காலத்தில் மக்கள் உணவையும் நீரையும்விட மன்னனை உயிராகக் கருதினர். ஆகா.. ஓகோ... என்று அக்கால மன்னர்களைப் புகழ்ந்துவிட்டுப் பாடலின் இறுதியில் "மன்னன் மக்களைக் காப்பதைத் தன்னுடைய கடமையாகக்கொள்ள வேண்டும்" என்று மோசிகீரனார் கூறுவதையோ அல்லது பிசிராந்தையார் (புறம்:184) போன்ற புலவர்கள் தவறான பாதையில் செல்லும் மன்னர்களின் மனதை மாற்ற வாசிப்பில் கவனிப்பதில்லை.

இவை ஒருபுறம் இவ்வாறிருக்க, மக்களின் இல்வாழ்க்கை எவ்வாறிருந்திருக்கிறது என்பது இவற்றைவிட முக்கியமான ஒன்றாகும். அகநானூற்றில் அகம் என்ற போர்வையில் பதிவாகியுள்ள செய்திகள், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தேவை பற்றிய ஏராளமான செய்திகளைத் தருகின்றன. அவற்றில் முக்கியமான செய்தி பொருள் தேடிச்செல்வதாய் அமைவது.

இல்லறம் நடத்தத் தேவையான பொருளீட்ட தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றதான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் நிறைய பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு பொருளீட்டச் செல்லும் தலைவன் மொழிபெயர்தேயம் நோக்கிச் செல்வதாகப் பாடல்கள் பலவற்றில் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக, அகநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களில் இந்த அமைப்பிலான பாடல்கள் அதிக அளவில் உள்ளன.

தலைவன் பொருளீட்டச் செல்லும் இடம் மொழிபெயர்தேயத்துடன் தொடர்பு கொள்ளும் இடங்கள் அகநானூற்றுப் பாடல்களில் அதிகம் இடம்பெற்றதற்கான காரணம் என்ன? அதனுள் மறைந்துள்ள வரலாற்று அரசியல் என்ன என்பதைப் பற்றி ஆராய முதலில் பொருள் தேடிச் செல்லும் தலைவன் செல்லும் இடங்கள் பற்றிய பதிவுகளை வரிசையாகப் பார்ப்போம். பிறகு அத்தகைய பாடல்கள் கெண்டுள்ள வரலாற்று அரசியல் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

தலைவன் பொருளீட்ட "சேரனது நாட்டுக்கு அப்பாலுள்ள வெப்பம் மிகுந்த கொடிய காட்டில் வழிச்செல்லும் புதியவர்கள் அச்சத்தால் அலறி ஓடும்படி, கொலையை விரும்பும் விருப்பங்கொண்ட ஆண் புலியானது களிற்றினைக் கொன்று வலம்பட அதனை வீழ்த்திய வெற்றிக் களிப்புடன் பக்க மலைகளில் எதிரொலி பிறக்குமாறு இடி முழக்கம் போல் முழங்குதற்கு இடனான நெடிய மரங்கள் நிறைந்த மலை வழியைக் கடந்து சென்றதாக" (அகம்.389:15-24) ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. நன்னனது விண்ணைத் தொடும் அளவு உயர்ந்த மலைகளைக் கடந்து சென்றதாகவும் (அகம்.173:8-18), எருமை என்பவனின் நாட்டின்கண் உள்ள அயிரி என்னும் ஆற்றினைக் கடந்து சென்றதாகவும் (அகம்.253:9-20), கண்ணன் எழினி என்பானது தேன் மிகுந்த முதுகுன்றம் என்னும் மலையைக் கடந்து சென்றதாகவும் (அகம்.197: 5-9) பாடலில் கூறப்பட்டுள்ளது.

இவையன்றிப் பொருளீட்ட தலைவன் புல்லியின் வேங்கட மலைக்கு அப்பால் உள்ள வடுகர் நாட்டிற்கு அப்பாலுள்ள மொழிபெயர்தேயம் சென்றுள்ளதாக அகநானூற்றில் 20 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. அப்பாடல்களில் அகம் 31 ஆம் பாடல் வருமாறு.

**"நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் மண்டிலம்**
**புலங்கடை மடங்கத் தெறுதலின், ஞொள்கி,**
**"நிலம் புடைபெயர்வது அன்றுகொல், இன்று?" என,**
**மன் உயிர் மடிந்த மழை மாறு அமையத்து,**
**இலை இல ஓங்கிய நிலை உயர் யாஅத்து**
**மேற் கவட்டு இருந்த பார்ப்பினங்கட்கு,**
**கல்லுடைக் குறும்பின் வயவர் வில் இட,**
**நிண வரிக் குறைந்த நிறத்த அதர்தொறும்,**
**கணவிர மாலை இடூஉக் கழிந்தன்ன**
**புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்**
**கண் உமிழ் கழுகின் கானம் நீந்தி,**
**"சென்றார்" என்பு இலர் தோழி! வென்றியொடு**
**வில் அலைத்து உண்ணும் வல் ஆண் வாழ்க்கைத்**
**தமிழ் கெழு மூவர் காக்கும்**
**மொழி பெயர் தேஎத்த பல் மலை இறந்தே" (அகம்: 31).**

இப்பாடல் மூன்று வேந்தர்களும் விற்போரில் பகைவர்களை வென்று அவர்கள் தரும் திரைப்பொருளைக் கொண்டு நாட்டை ஆள்பவர்கள் என்று சொல்லும் அதே நேரம் அவர்களால் காக்கப்படும் வேற்றுமொழிகளைப் பேசும் நாடுகளைக் கடந்து தலைவன் பொருளீட்டச் சென்றதை எண்ணித் தலைவி வருந்துவதாகக் கூறுகின்றது. இதை வெறும் பாலைப் பிரிவு என்ற உரிபொருளுக்கான பதிவாகக் கருதி ஒதுக்கிவிட முடியாது. அதாவது அகம் 27 ஆம் பாடலைப் போன்று அமைந்துள்ள பாடல்களை வேண்டுமானால் தலைவியின் பிரிவுத்துயரைப் பற்றிச் சித்தரிக்கும் பாடல்களாகக்கொள்ளலாம். காரணம் அப்பாடல் கொடுமையான காட்டுவழியினைக் கடந்து சென்றான் என்று பாலைத்திணைக்குரிய பண்புடன் அமைந்துள்ளது. அத்துடன், அப்பாடலின்

**"................................... வடவயின்**
**வேங்கடம் பயந்த வெண் கோட்டு யானை**
**மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்**
**கொற்கை அம் பொருந்துறை முத்தின் அன்ன**
**நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்" (அகம் 27: 6-10)**

என் அடிகள் தலைவியின் நகைப்பினை விளக்குவதற்குப் பாண்டியரின் கொற்கை நகரத்தின் வளம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது இங்கு அகத்தில் வரலாற்று உண்மை உவமையாகக் கையாளப்பட்டுள்ளது. இது மன்னர்களின் பெருமையைப் போற்றுகின்றது. அதே நேரம் அகம் 31 இல் இடம்பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்பான "தமிழ் நாட்டினை ஆளும் மூவேந்தர் விற்போரில் பகைவர்களை வென்று அவ்வெற்றியால் பெற்ற திறைப்பொருளை உண்டு வாழ்பவர் வலிய ஆண்மை பொருந்திய வாழ்வினைக் கொண்டவர் அவர்களால் பாதுகாக்கப்பெறும் வேற்று மொழிகளையுடைய நாடுகளில் உள்ள பல மலைகளையுங் கடந்து தலைவர் நெடுந்தூரம் சென்றுள்ளார்" (அகம். 31:12-14) என்பது தலைவன் சென்ற பாலை வழியன் கொடுமை பற்றிய வருணனைஅன்று் அது தலைவன் சென்றுள்ள ஊர் பற்றிய பதிவு.

அதாவது சில பாடல்களில் தலைவன் சென்ற காட்டுவழி மிகக் கொடுமையானது என்பதை விளக்க மன்னர்களின் போர் முதலிய சில வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றனர். அது வேறு. ஆனால் மேற்கண்ட 20 பாடல்களில் தரப்படும் வரலாற்றுக் குறிப்பு வேறு. அது பாலை நிலத்தின் கொடுமையை விளக்கக் கூறினாலும் அந்த வரலாற்றை அது சொல்ல வேண்டும் என்பதற்காகவேதான் பாடப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. எவ்வாறாயினும் பாடல்களில் உவமைகளாக அல்லது நேரடியாக என எப்படிச் சொல்லியிருந்தாலும் அது வரலாற்றுப் பதிவுதான் என்பதில் ஐயமில்லை. இரு பாடல்களும் கொடுக்கும் வரலாற்றுப் பதிவுகளில் ஒன்று தலைவியின் அழகை விளக்க உவமையாகவும் மற்றொன்று வெளிப்படையாகவும் இரு நிலைகளில் அமைந்துள்ளன. அத்துடன் இவ்விரு சான்றுகளும் ஒரு உண்மையைத் நமக்குத் தருகின்றன.

ஒன்று மன்னர்கள் நாடுகளை வென்று பெற்ற திறைப் பொருளைக்கொண்டு மகிழ்ச்சியாக வாழந்துள்ளனர். மற்றொன்று அத்தகைய மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டுள்ள மன்னர்களின் வளமான நாட்டில் இருந்து தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தலைவன் தன்னுடைய தலைவியைப் பிரிந்து வெளிநாடுகளுக்குப் பொருளீட்டச் செல்கிறான். இப்படிப்பட்ட முரண் பண்டைக்காலத்தில் இருந்துள்ளது. அதாவது, ஒருபுறம் வளமும் மறுபுறம் வறுமையும் இருந்துள்ளதை இந்த பதிவுகள் தெளிவாக்குகின்றன.

பொருளீட்ட தலைவன் புல்லியின் வேங்கட மலைக்கு அப்பால் உள்ள வடுகர் நாட்டிற்கு அப்பாலுள்ள மொழிபெயர்தேயம் சென்றுள்ளதாக அகம் 31, 61, 67, 83, 107, 127, 209, 211, 213, 253, 265, 281, 295, 311, 349, 359, 375, 381, 393, 389 ஆகிய 20 பாடல்களில் ஒருபுறம் தலைவன் பொருள் தேடச் சென்றுள்ள இடம் வேற்று மொழி பேசும் மொழிபெயர் தேயம் என்று கூறப்படும் அதே நேரம் மறுபுறம் தலைவியின் துயரத்திற்கு தலையாலங்கானத்துப் போர், காரி ஓரி போர் (அகம் :209), எழினி மத்தி போர் (அகம்:211), சேரன் போர் (அகம்:375) ஆகியனவும், கவிரி வளம், சேரனின் கொல்லிமலை வளம் (அகம்:213), நன்னன் நாட்டு வளம் (அகம்:349), வானவரம்பன் வெளியம் அழகு (அகம்:359) புல்லியின் வேங்கட மலையின் வளம் மற்றும் புல்லியின் விருந்தோம்பல் முதலியனவும் (அகம்: 211, 265, 281, 293, 311, 349, 359, 393,) கூறப்பட்டுள்ளன என்பனவும் இங்கு சிந்திக்க வேண்டியுள்ளன.

அத்துடன், “தலைவன் தேட விரும்பும் பொருள் நந்தர் பொருளைவிடப் பெரிதா? (அகம்:265) என்ற வினா? தலைவியின் அகம் சார்ந்து ஒலிக்கும் குரலாக மட்டுமே கொள்ளமுடியுமா என்பதும் கேள்விக்குறியே.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இப்பாடல்களில் கூறப்பட்டுள்ள மன்னர்களான நன்னன், புல்லி, ஆகியோர் வள்ளல் குணம் கொண்டவர்களாகவே பாடல்களில் சுட்டப்படுகின்றனர். அப்படி இருந்தும் தலைவன் பயணம் ஏன் தொடர்கின்றது என்பதும், இப்பாடல்களில் சுட்டப்படும் தலைவன் யார் என்பதும் குறித்து அறியமுடியவில்லை. இதுபற்றி இன்னும் விரிவாக ஆராயவேண்டி உள்ளது.

இது இப்படி இருக்க, இதே நூலில் “தலைவன் தேடிச்செல்லும் பொருளானது” சோழன் - உறந்தை (அகம்.93:4-7) சேரன், கொடுமுடி - ஆமூர் (அகம்159: 13-21), இமயமலை, நந்தர் - பாடலிபுரம், கங்கையாறு (அகம் 265:1-7,23), சேரலாதன் (அகம்.127:3-11), சோழர் - காவிரி பெருந்துறை (அகம்.123:8-14), கரிகால் வளவன் - இடையாறு (அகம்.141:12-24) உறையூர் (அகம்.237:8-14), களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், நன்னனை வென்று இழந்த நாட்டைப் பெற்றது போல் பெருஞ்செல்வம் (அகம்.199:16-24), சோழநாடு (அகம்.201.12-19), குடநாடு (அகம்.91:9-18), உறையூர் (அகம்.237:8-14), சேரலாதன் - மரந்தை (அகம்.127:311) என அமைந்திருந்தன என்கின்றனர்.

மேற்கண்ட குறிப்புகளைக்கொண்டு பார்க்க "யானைப்புக்க புலம் போல மன்னர்கள் வரிவசூல் செய்துகொண்டிருந்த" சமயத்தில் வாழ்க்கை நடத்துவதற்குரிய பொருள் தேடிய மக்களின் பயணம் தமிழக எல்லைகளைக் கடந்து அதிகம் நிகழ்ந்துள்ளதைப் பாடல்களின் பதிவுகள் தெளிவாக உணர்த்துகின்றன. இவை மக்கள் மன்னன் உறவின் இடைவெளியைப் புலப்படுத்துகின்றன.

அதாவது, ஒருபுறம் மக்கள் வாழ்க்கை நடத்துவதற்குப் போராடிக் கொண்டிருப்பதும் மறுபுறம் செல்வச் செழிப்பில் மன்னர்கள் நகரை நிர்மாணித்து மகிழ்ந்திருப்பதையும் இக்குறிப்புகள் புலப்படுத்துகின்றன.

அதாவது, ஒரு புறம் காவிரிப்பூம்பட்டித்தையே பரிசாகக் கொடுத்தாலும் நான் தலைவியை விட்டுப் பிரியேன் என்று கூறப்பட்டுள்ள நிலையில் மறுபுறம் வாழ்க்கை நடத்தத் தேவையான பொருளீட்ட மக்கள் அதே வளமான பகுதியிலிருந்து வேற்று மொழி பேசும் மக்கள் வாழும் வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்வதாகக் கூறுகின்றது.

மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் நிறைந்திருந்த காலகட்டத்தில் (தலைவன்) இல்லறம் நடத்தத் தேவையான பொருளீட்ட வேற்று மொழி பேசும் பிற நாடுகளை நோக்கிச் செல்வதற்கான தேவை ஏன் எழுந்தது? என்ற கேள்வி இங்கு இயல்பாக எழுகின்றது. அதுபற்றி விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

**பயன்பட்ட நூல்கள்**

1. அகநானூறு மூலமும் உரையும் (இரண்டு தொகுதிகள்), 2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.
2. அமைப்பியலும் அதன் பிறகும் (ஸ்ட்ரக்சுரலிசம் நூலின் விரிவாக்கப்பட்ட பதிப்பு), தமிழவன், 2008, அடையாளம், புத்தாநத்தம்.
3. தமிழின் கவிதையியல், சிவத்தம்பி, கா., 2007, (முதல் பதிப்பு) குமரன் புத்தக இல்லம், சென்னை.
4. தமிழ் நாட்டு வரலாறு (சோழப் பெருவேந்தர் காலம்), தமிழ் நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு, 1998 (முதல் பதிப்பு), தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.
5. தொல்காப்பியமும் கவிதையியலும், சிவத்தம்பி, கா., 2007, (முதல் பதிப்பு) குமரன் புத்தக இல்லம், சென்னை - 600 026.
6. பத்துப்பாட்டு மூலமும் உரையும், (இரண்டு தொகுதிகள்), 2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.
7. புறநானூறு மூலமும் உரையும், (இரண்டு தொகுதிகள்), 2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.